# பண்பாட்டுக்கூறுகளில் விருந்தோம்பல்

37

**கோ. நிர்மலா**

**உதவி பேராசியர்**

**ஸ்ரீ விஜய் வித்யாலையா கல்லூரி, தருமபுரி**

தமிழர்களின் தனிச்சிறப்புகளில் ஒன்று விருந்தோம்பலாகும். விருந்து என்பது பண்டைக் காலத்தில் உறவினர் அல்லாத ஒருவர் மற்றொருவர் இல்லத்திற்குச் சென்று உண்டு, உறங்கி இளைப்பாரிச் செல்வதாக இருந்தது. இவ்விருந்தின் மூலம் உறவுகளையும், நட்புகளையும் வளர்த்தனர். விருந்து கொடுப்பதாகவும், பெற்றுக் கொள்பவருக்கு இணைப்பையும் மகிழ்ச்சியையும் நல்கியது. இவ்விருந்தினை தொல்காப்பியர் கூறுகையில்

"விருந்தே தானே புதுவது கிளந்த
யாப்பின் மேற்றே" (தொல்-செல்-540)

என்கிறார். மேலும் வீட்டிற்கு வருகின்ற விருந்தினர்களை இன்முகத்தோடு வரவேற்று அவர்கள் மனம் கோணாதபடி உபசரிக்க வேண்டும். விருந்தினர்களை முகமலர்ச்சியுடன் வரவேற்று உபசரித்தால் அவர்கள் வீட்டில் மனமகிழ்ந்து திருமகள் உறைவால் என்று

"அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஒப்புவாள் இல்" குறள் (64)

வள்ளுவர் சுட்டுகிறார். மேலும் திருவள்ளுவர் விருந்தோம்பலுக்கு ஒரு அதிகாரமே படைத்துள்ளார். இதன் மூலம் விருந்தின் சிறப்பையும் விருந்தோம்பலின் உயர்வையும், நாம் அறிந்து கொள்ள முடிகின்றது. இத்தகைய விருந்தோம்பல் பண்புகளை பற்றி கீழ்க்கண்டவாறு காண்போம்.

**அகநூல்களில் விருந்தோம்பல்**

"அகம் களிந்து முகமலர்ந்து" வரவேற்பதும், உபரிப்பதும் தமிழர் விருந்தோம்பலைச் சிறந்த கடமையாகவும், பண்பாடாகவும் போற்றினர். அரசர் முதல் சாதாரண மக்கள் வரை தம் இல்லறக் கடமையாகவும், கௌரவமாகவும் கருதினர்.

சங்க கால மக்கள் இரவு வேளையில் விருந்ததினர் வந்தால் இன்முகத்துடன் அவர்களை வரவேற்றுக் கணவனும், மனைவியும் சேர்ந்தே விருந்து படைத்தனர் என்று நற்றினை கூறுகிறது.

"அல்லி லாயினும் விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின் மெல்லியல்" (நற்-42)

என்ற பாடல் வரிகளின் மூலமும் அறியலாம்.

சங்க காலத் தமிழர்கள் தங்களிடம் பொருளில்லை என்ற போதும் தம் வீட்டிற்கு வருகின்ற விருந்தினர்களுக்கு உணவளித்தல் என்பது தம்மா**ல்** இயலாது என்றெண்ணி வீட்டில் தங்கி விடாமல் பொருளீட்டி வந்தாயினும் விருந்தினர் உபசரிக்க வேண்டுமென எண்ணினர் என்பதை உகாய்குடிகிழர் பாடல்வழி அறியலாம்.

"ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல் எனச்
செய்வினை கைம்மிக எண்ணுதி அல்லினைக்கு" (குறள்-63)

என்ற பாடலின் வரிகள் விருந்தோம்பல் தமிழர் மரபு என்பதை கண்முன் காட்டுகிறது.

அறவுணர்வும், தமிழர் மரபும்

இல்லறம் புரிவது விருந்தோம்பல் செய்யும் பொருட்டே என்கிறார். முகம் வேறுபடாமல் முகமலர்ச்சியோடு விருந்தினரை வரவேற்க வேண்டும் என்பதை "மோப்பம் குழையும் அணிச்சம்" என்ற குறளில் எடுத்துரைக்கிறார். விருந்தினரைப் போற்றுதல் இல்லறக் கடமையாக இருந்தது.

"தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோலும் இழந்த என்னை"

(சிலப்பதிகாரம்-15:72:73)

என்று கண்ணகி வருந்துகிறாள். கோவலனைப் பிரிந்ததைவிட விருந்தினரைப் போற்ற முடியாத நிலையை எண்ணியே வருந்துவதாகக் குறிப்பிடுவதன் மூலம் விருந்தினைப் போற்றிப் பேணல் பழந்தமிழர் மரபு என்பதை இளங்கோவடிகள் உணர்த்துகிறார்.

கல்வியும், செல்வமும் பெற்ற பெண்கள் விருந்தும், ஈகையும் செய்வதாக கம்பர் குறிப்பிட்டுள்ளார்.

"பொருந்து செல்வமும், கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்
விருந்தும்அன்றி விளைவன யாவையே"

(கம்பராமாயணம்.1:2:36)

கலிங்கத்துப் பரணியிலும் செயங்கொண்டார் விருந்தினர்க்கு உணவிடுவோரின் முகமலர்ச்சியை உவமையாக்கியுள்ளார்.

"விருந்தினரும் வறியவரும் நெருங்கியுண்ண
மேன்மேலும் முகமலரும் மேலோர் போல"

(கலிங்கத்துப்பாணி-477)

இல்லறத்தின் மேன்மையை உணர்த்தும் வகையில் விருந்தினரை வரவேற்கும் முறையில் குறுந்தொகையில் இல்லத்தில் பலரும் நுழையும் அளவிற்கு உள்ள பெரிய வாயிலை இரவில் மூடுவதற்கு முன்னர் உணவு உண்ண வேண்டியவர்கள் யாரேனும் உள்ளீர்களா? என்று கேட்கும் வழக்கம் இருந்ததை

"பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்
வருவீர் உளீரோ" (குறந்-118)

இவ்வாறு குறுந்தொகையில் பாடல் தலைவி விருந்தினரை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கும் செயல் நம்மை மெய் சிலிர்க்க வைப்பதாக அமைந்துள்ளது.

**வாழை இலையில் விருந்து**

தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு. தலைவாழை இலையில் விருந்தினருக்கு உணவளிப்பது நம் மரபாகக் கருதப்படுகிறது. நம் மக்கள் வாழை இலையின் மருத்துவப் பயன்களை அறிந்திருந்தனர்.

தமிழர்கள் உணவு பரிமாறும் முறையை நன்கு அறிந்திருந்தனர். உண்பவரின் இடப்பக்கம் இலையின் விரித்த பகுதியும் வரவேண்டும். ஏனென்றால் வலது கையில் உணவு உண்ணும் பழக்கமுடையவர்கள் நாம் இலையில் இடது ஓரத்தில் உப்பு, ஊறுகாய், இனிப்பு முதலான அளவில் சிறிய உணவு வகைகளையும், வலது ஓரத்தில் காய்கறி, கீரை, கூட்டு முதலான அளவில் பெரிய உணவு வகைகளையும், நடுவில் சோறும் வைத்து எடுத்துண்ண வசதியாகப் பரிமாறுவார்கள். உண்பவர் மனமறிந்து அவர்கள் விரும்பிச் சாப்பிடும் உணவு வகைகளைப் பரிவுடன் பரிமாறுவர்:

அமெரிக்காவின் மினசோட்டா தமிழ்ச் சங்கம் வாழையிலை விருந்து விழாவை ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்றது. முருங்கைக்காய் சாம்பார், மோர்க்குழம்பு, வேப்பம்பூ ரசம், வெண்டைக்காய் கூட்டு, திணைப் பாயாசம், அப்பளம் என சுவையான தமிழர் விருந்துக் கொடுக்கின்றனர். அங்கு வாழும் தமிழர்கள் பலரும் இந்த விருந்தில் பங்கேற்றுச் சிறப்பிக்கின்றனர்.

புறநூல்களில் இன்மையிலும் விருந்தோம்பல் வீட்டிற்கு வந்தவருக்கு வறிய நிலையிலும் எவ்வழியிலேனும் முயன்று விருந்தளித்து மகிழ்ந்தனர். நம் முன்னோர் தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த திணையை உரலில் இட்டுக் குத்தியெடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள். தலைவி இதனை

“குரல் உணங்கு விதைத் திணை உரல் வாய்ப்பெய்து
சிறிது புறப்பட்டன்றோ இலன்" (புறம்-333)

நேற்று வந்த விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால் இரும்பினால் செய்த பழைய வாளை அடகு வைத்தான் தலைவன் இன்றும் விருந்தினர் வந்ததால் தன் கருங்கோட்டுத் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது. இச்செய்தி

" நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்தன்
இரும்புடைப் பழிவாள் வைத்தனன் இன்று இக்
கருங்கோட்டுச் சீறியாழ் பணையம்" (புறம்-316)

இளையான்குடி மாறநயணாரின் வீட்டுக்கு வந்த சிவனடியார்க்கு விருந்தளிக்க அவரிடம் தானியமில்லை; எனவே, அன்று விதைத்துவிட்டு வந்த நெல்லை அரித்து வந்து பின் சமைத்து விருந்து படைத்த திறம் பெரியபுராணத்தில் காட்டப்படுகிறது.

**தணிந்து உண்ணான்**

பண்டைத் தமிழர்கள் திரும்பிச் செல்லும்போது அவர்களைப் பிரிய மனமின்றி விருந்தினர் மேலும், வழியனுப்பும் பொழுது அவர்கள் செல்லவிருக்கிற நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட தேர்வரை ஏழு அடி நடந்து சென்று வழியனுப்பினர்.

"காலின் ஏழடிப் பின் சென்று" (பெரும்-166)

(பொருணராற்றுப் படை-166)

கரிகாலன் தன்னை நாடி வந்த பொருநரை கறியும், சோறும் உண்ண வைத்து பொன்னும், பொருளும் கொடுத்து ஏழடி நடந்துச் சென்று வழியனுப்பினான் என்ற செய்தி பொருணராற்றுப்படையில் தமிழரின் விருந்தோம்பள் பறைசாற்றுகிறது.

தனித்து உண்ணாமை என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை அமிழ்தமே கிடைத்தாலும் தாமே உண்ணாது பிறருக்கும் கொடுப்பர் நல்லோர். அத்தகையோரால் தான் உலகம் நிலைத்திருக்கிறது என்பதை

"உண்டால் அம்ம, இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிது எனத்
தமியர் உண்டலும் இலரே... " (புறநானூறு-182)

என்று கடலுள் மாயிந்த இளம்பெருவழுதி புறநானூற்றுப் பாடலின் வரிக்கு ஏற்பத் தமக்கென வாழாமல் பிறர்க்கென முயலுதலும் கிடைத்தற்கரிய அமுதமே கிடைத்தாலும், அதனைத் தாமே உண்ணாமல் பிறருடன் கலந்து பகிர்ந்து உண்டு வாழும். உயர்பண்புடையவர் தமிழர்கள் என்று வாழ்ந்து காட்டினர்.

**விருந்தோம்பல் இன்றும்**

புதியதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையும் அதில் தலை வைக்கத் திண்டும் அமைத்தனர் முன்னோர். இன்று வீட்டுக்குத் திண்ணை வைத்து கட்டுவதுமில்லை. அறிமுகமில்லாத புதியவர்களை விருந்தினர்களாக ஏற்பதுவும் இல்லை. இருப்பினும் திருவிழாக் காலங்களில் ஊருக்கு வரும் புதியவர்களையும் அழைத்து அன்போடு விருந்தளிப்பதைச் சில இடங்களில் காணமுடிகிறது.

முன்னர்த் திருமணத்தை உறுதி செய்தல், திருமணம், வளைகாப்பு, பிறந்தநாள், புதுமனை புகுவிழா போன்றவற்றை இல்ல விழாக்களாகவே கொண்டாடினார். அப்போது மிகுதியான விருந்தினர்களை வரவேற்று உணவளித்து மகிழ்ந்தனர். அந்த இல்ல விழா நாட்களில் அப்பகுதி வாழ் மக்களும் வெளியூர் விருந்தினர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்தனர்.

காலப்போக்கில் வீட்டில் நடைபெற்ற விழாக்கள் திருமணக் கூடங்களுக்கு இடம் பெயர்ந்துவிட்டனர். பண்பாட்டு மாற்றமாக இன்று சில இடங்களில் விருந்தினர்களை வரவேற்பது முதல் பந்தியில் உபசரித்து வழியனுப்பும் வரை திருமண ஏற்பாட்டாளர்களே செய்யும் விருந்தோம்பல் நடைபெறுவதைக் காணமுடிகிறது.

பண்டைத் தமிழர் இல்லங்களிலும், உள்ளங்களிலும் விருந்தோம்பல் பண்பாட்டு செழித்திருந்தது. அந்த உயரிய தமிழ்ப் பண்பாடு இன்றைய தமிழர்களிடம் மேற்கூறிய முறைகளில் பின்பற்றப்படுகின்றது. காலந்தோறும் தமிழர்களின் அடையாளமாக விளங்கும் உயர் பண்பான விருந்தோம்பலைப் போற்றிப் பெருமிதம் கொள்வோர்.

**முடிவுரை**

நமது பண்பாட்டின் கூறுகளான விருந்தோம்பல் பற்றி சங்க இலக்கியம் கூறுகிறது. அதில் விருந்தோம்பல் என்பது தமிழரின் அடையாளம் பாரம்பரிய சின்னமாக அமைந்துள்ளன. வந்தாரை வாழவைக்கும் நமது தமிழரோட பாரம்பரியம் அதில் விருந்தோம்பல் என்பது முதல் இடத்தை பிடிக்கின்றது. அக நூல்களின் வாயிலாகவும், புற நூல்களின் வாயிலாகவும் அதை யுணர்வுடன் அகமகிழ்ந்து

நிரூபித்து காட்டியிருக்கிறார்கள். நம் தமிழ் மக்கள் வாழை இலையில் பறிமாறும் பழக்க வழக்கம் மற்றும் அறுசுவை

புன்னகையுடன் பரிமாறும் அழகு மற்றும் அமிழ்தமாக இருந்தாலும், அதை பகிர்ந்து உண்ணும் பழக்க வழக்கம் நமது பாரம்பரியமாகும்.

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
உண்டி முதற்றே, உணவின் பிண்டம்" (புறநானூறு-18)

குடபுலவியனார் பாடலுக்கு ஏற்ப பண்பாட்டின் கூறுகளில் விருந்தோம்பல் என்பது தலைசிறந்த அறமாகும். எனவே விருந்தோம்பலை பற்றி இக்கட்டுரையின் வாயிலாக அறிந்து கொண்டோம்.

**துணை நூல் பட்டியல்**


| | | |
|---|---|---|
| 1 | திருஞானசம்பந்தர் | தொல்காப்பியம்,கதிர் பதிப்பகம்,தெற்கு வீதி, திருவையாறு-613 204. |
| 2 | பால சுப்ரமணியன் கு.வ | திருக்குறள்,கலைக்கோட்டு பதிப்பகம்,உலகத் தமிழர் ஆராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை-600 113. |
| 3 | ச. வே. சுப்ரமணியன் | நற்றிணை,மணிவாசகர் பதிப்பகம்,பாரிமுனை, சென்னை. |
| 4 | ச. வே. சுப்ரமணியன் | குறுந்தொகை |
| 5 | புலியூர் கேசிகன் | சிலப்பதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை. |
| 6 | நாராயண வேலுப்பிள்ளை | கம்பராமாயணம், திருமகள் நிலையம்,சென்னை-600 017. |
| 7 | | கலிங்கத்துபரணி, பள்ளி புத்தகம்-1, பத்தாம் வகுப்பு. |
| 8 | ச. வே. சுப்ரமணியன் | குறுந்தொகை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை |
| 9 | ச. வே. சுப்ரமணியன் | புறநானூறு |
| 10 | ச. வே. சுப்ரமணியன் | புறநானூறு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை |
| 11 | ச. வே. சுப்ரமணியன் | பொருணராற்றுப்படை |
| 12 | ச. வே. சுப்ரமணியன் | புறநானூறு |
| 13 | ச. வே. சுப்ரமணியன் | புறநானூறு |